தலைப்பு 297 - கம்பனிகள் பதிவாளர் திணைக்களம் - 2024

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 297 – கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2025 மே 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2025 ஆகஸ்ட் 15 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இவ் அறிக்கையின் 1.6 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, 2024 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்களில் நிதி நிலைமை, நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்பு 01 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக்கூற்றுகளை தயாரிப்பதற்கான அடிப்படைக்கு இணங்க பொருண்மையானவை தொடர்ப்பிலும் நியாமான நிலைமையை பிரதிபளிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ் அறிக்கை 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த வியடங்களில் இருந்துதான தாக்கத்தை தவிரத்து எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக ஆக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 விடயமொன்றை வலியுறுத்தல் - நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படை

இந்த நிதிக்கூற்றுக்கை தயாரிக்கும் அடிப்படை விபரிக்கும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்பு 01 தொடர்பில் கவணம் செலுத்துமாறு கோருகின்றேன். நிதிக்கூற்றுக்கள் அரசின் நிதிப்ப பிரமாணம் 150, 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் விளையாட்டுத்துறை அபிவிருத்த் திணைக்களத்தின் பொது திறைசேரியினதும், பாராளுமன்றத்தினதும் தேவைப்பாட்டிற்காக தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால் இந்த நிதிக்கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கக்கூடும். எனது அறிக்கை கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தினதும், பொது திறைசேரியினதும், பாராளுமன்றத்தினதும் பயன்பாட்டினை மட்டும் நோக்கமாக கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது.

1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 திகதிய அரச கணக்குகள் வழிகாட்ட இலக்கம் 06/2024 இன் பிரகாரம் அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும், உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக்கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாகப் பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரித்து பேணிச் செல்லப்படுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய அம்முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக்கூடியதாக இருப்பதுடன், இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் அடிப்படையில் தங்கியிருக்கும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறைசார் பின்னணியுடன் செயற்படுத்தப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படை ஒன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று உருவாகும் ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீடு செய்தல் என்பவற்றிற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டன. தவறுதலாக காண்பிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கத்தினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக

காண்பித்தல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களினால் ஆகும்.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவு ஒன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடகத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள், சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமானதாகவும் உள்ளடக்கப்பட்டதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலை மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தியுள்ளேன்.

1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) வருமானப் பெறுவனவுகள்

திணைக்களத்திற்குரிய வருமானப் பெறுவனவுகள் கணக்கீடு செய்தலின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
நிலுவை வருமானக் கூற்றில் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிறுவை வருமானம் என அந்த ஆண்டின் ஜூன் 30 திகதியில் உள்ளவாறு நிறுவை வருமானமாகிய ரூபா 1,780,110,300 தொகை மாத்திரம் காட்டப்பட்டிருந்தது. அதன்படி, நிதிப் பிரமாணம் 142(1) பிரகாரம் அரசுக்கு கிடைக்க வேண்டிய பணம் மற்றும் அந்தப் பணத்தை முடிவு செய்தல் மற்றும் தீர்மானித்தல் செய்முறை தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	நிலுவை வருமானக் கூற்று தயாரிப்பதற்காக குறிப்பிட்ட நாளொன்றில் நாளதுவரை ஆக்கப்பட்ட தகவல்கள் பெற்றுக்கொள்வதற்கான வசதிகள் முறைமையில் காணப்படவில்லை எனவும் மற்றும் முறைமை அபிவிருத்தி அலுவல்களை விரைவுபடுத்தி நிலுவை வருமானக்கூற்று தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நிலுவை வருமானம் சரியாக அறிக்கையிடுவதற்கு பொருத்தமான முறைமையொன்று செயற்படுத்த வேண்டும்.

(ஆ) மீண்டுவரும் செலவுகள்

நிதிக்கூற்றுக்களுக்குரிய மீண்டுவரும் செலவுகளை கணக்கீடு செய்வதில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டது.

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
ஏனைய படிகள் (1003) செலவு விடயத்திற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 13,640,000 இற்கான குறைநிரப்பு மதிப்பீடொன்று பெற்றுக்கொண்டிருந்த போதிலும் ஏசீஏ-02 படிவத்தில் குறைநிரப்பு மதிப்பீட்டு ஏற்பாடுகளின் கீழ் காட்டப்பட்டிருக்காததுடன், மொத்த ஏற்பாடுகளும் ஒதுக்கீட்டுச் சட்டத்தின் மூலம் வழங்கியிருந்த ஏற்பாடுகள் என காட்டப்பட்டிருந்தது.	அரச கணக்குத் திணைக்களத்தை வினவி தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	குறைநிரப்பு ஏற்பாடுகள் சரியாக கணக்குகளில் காட்டப்பட வேண்டும்.

(இ) கட்டுநிதி மீதி

கட்டுநிதி மீதியை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டது.

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
CIGAS முறைமையின் மூலம் உருவாக்கப்படும் மீதிகள் பரீட்சை மீதியில் ஏனைய மூலவளங்களில் கட்டுநிதி வரவு மீதி ரூபா 301,826,586 தொகை மற்றும் செலவு மீதி ரூபா 510,689,556 தொகையாக காணப்பட்டது. CIGAS முறைமையின் மூலம் உருவாக்கப்படுகின்ற நாளாந்த பரீட்சை மீதியில் ஏனைய மூலவளங்கள் மூலம் கட்டுநிதி வரவு மீதி ரூபா 1,200,000 தொகை மிகையாகவும், செலவு மீதி அந்த எண்ணிக்கையினால் குறைவாகவும் காட்டப்பட்டிருந்தது.	இரண்டாவதாக அனுப்பப்பட்ட 2024 ஜனவரி மாதக் கணக்குப் பொழிப்பு Process பண்ணப்படாமையால் திறைசேரியின் கணக்குப் பொழிப்பு மற்றும் திணைக்களக் கணக்குப் பொழிப்பு இடையே வித்தியாசம் ஒன்று காணப்பட்டது.	நிதிக்கூற்றுக்களில் கட்டுநிதி மீதி மாதாந்தம் பரீட்சை மீதியுடன் இணக்கம் செய்ய வேண்டும்.

(ஈ) ஏடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிருக்காமை

திணைக்களத்தினால் பின்வரும் பதிவேடுகள் பேணியிருக்கவில்லை.

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
கட்டுப்பாட்டுக் கணக்குகள்		
நிதிப் பிரமாணம் 142(3) பிரகாரம் சேகரிக்கப்பட்ட பணத்திற்காக கட்டுப்பாட்டுக் கணக்கு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.	சேகரிக்கப்படும் பணத்திற்காக நி.பி. 142(3) பிரகாரம் கட்டுப்பாட்டுக் கணக்குகள் (மொத்த மீதிக்காக) தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் வருமானம் தொடர்பாக கட்டுப்பாட்டுக் கணக்க தயாரிக்கப்பட வேண்டும்.

2. ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம், பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்துள்ளன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

3. நிதி மீளாய்வு

3.1 வருமான முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	1891 இன் 16 இலக்க சங்கங்கள் கட்டளைச் சட்டத்தின் 8(1) (ஈ) பிரிவின் பிரகாரம் பதிவு செய்யப்பட்ட சங்கங்களின் வருடாந்த அறிக்கைகள் கோப்பிடுதல் மேற்கொள்ளப்பட வேண்டும். 2024 ஜனவரி 01 திகதி முதல் 2024 திசெம்பர் 31 திகதி வரை 228 சங்கங்கள் மாத்திரம் வருடாந்த அறிக்கைகள் கோப்பிட்டிருந்ததுடன், செயற்படு சங்கங்களின் எண்ணிக்கையை சரியாக இனங்கண்டிருக்காமையால் அரசுக்கு அறவிடப்பட வேண்டிய வருடாந்த அறிக்கை கோப்பிடும்	அரசுக்கு அறவிடப்பட வேண்டிய வருடாந்த அறிக்கை கோப்பிடும் வருமானம் மற்றும் நிலுவை வருமானம் சரியாக கணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	வருடாந்த அறிக்கைகள் கோப்பிடப்படாத சங்கங்களிலிருந்து அறவிடப்படும் நிலுவைத் தொகையை இனங்கண்டு கணக்கீடு செய்வதற்கும் அந்த நிலுவை மீதியை அறவீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

	வருமானம் மற்றும் நிலுவை வருமானம் சரியாக கணிப்பதற்கு முடியாமல் இருந்தது.		
(ஆ)	வருமானக் குறியீடு 20.03.02.10 மற்றும் 2023 ஆண்டின் போது உள்ளவாறான வருமானம் 416,478,955 தொகையாக காணப்பட்ட போதிலும், மீளாய்வாண்டின் ஆரம்ப வருமான மதிப்பீடு ரூபா 320,000,000 தொகையும் திருத்தி மதிப்பீடு ரூபா 370,000,000 தொகையுமாக காணப்பட்டமையால் கடந்த ஆண்டை விட குறைவாக மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. மேலும், மீளாய்வாண்டில் உள்ளவாறான வருமானம் ரூபா 432,396,934 தொகை அதாவது திருத்திய வருமான மதிப்பீட்டை விட 17 சதவீதத்தை விட கூடிய பெறுமதியொன்றை கொண்டிருந்தது. அதன்படி, நிதிப் பிரமாணம் 128(2)(ஆ) பிரகாரம் வருமானம் மதிப்பீடுகள் முழுமையாகவும், முடிந்த அளவு சரியாகவும் தயாரித்திருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.	2024 ஆண்டிற்கான வருமான மதிப்பீடு திருத்தம மேற்கொண்ட சந்தர்ப்பத்தில் 2024 ஜூன் 30 திகதி வரை சேகரிக்கப்பட்டிருந்த உள்ளவாறான வருமானத்தின் 1/3 இற்கான பகுதி ரூபா 193,856,810 தொகையாகும். அது ஆரம்ப மதிப்பீடாகிய ரூபா 320,000,000 தொகை எனும் 60 சதவீதம் ஆகும். ஆண்டின் போது ஒரேசீராக வருமானம் கிடைக்கும் என எதிர்பார்க்க முடியாமையால் சேகரிக்கப்பட்ட உள்ளவாறான வருமானம திருத்திய மதிப்பீட்டை மிகைத்திருந்தது. எதிர் காலத்தில் முடிந்த அளவு சரியாக வருமான மதிப்பீடு தயாரிக்கப்படும்.	செய்முறை சாத்தியமான நிலைமையை கவனத்தில் எடுத்து வருமானம் முடிந்த அளவு சரியாக மதிப்பீடு செய்ய வேண்டும்.
(இ)	கம்பனி நிதியத்தில் இருந்து 2012, 2013, 2014 மற்றும் 2020 ஆகிய ஆண்டுகளின் போது கூட்டுத்தொகை ரூபா 5,700 மில்லியன் தொகை முற்பணம் என திறைசேரிக்கு வழங்கப்பட்டது. அவ்வாறாயினும் திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் 2020 மார்ச் 02 திகதி கடிதத்தின் மூலம் அந்த பணம் திரண்ட நிதியத்தின் வருமானத்திற்கு கணக்கீடு செய்யப்பட்டதென அறிவித்திருந்ததுடன், மீளாய்வாண்டு இறுதியளவிலும் திறைசேரியின் ஏடுகளில் கடன் முற்பணம் என காட்டப்பட்டிருக்கவில்லை.	கம்பனி நிதியத்தில் இருந்து திறைசேரிக்கு வழங்கியிருந்த முற்பணத் தொகையில் எதிரீடு செய்யப்பட்டிருந்த ரூபா 216,116,000 தொகை நிதிச் செயலாற்றுகை கூற்றில் காட்டப்பட்டுள்ளது. இந்த எதிரீடு செய்வதற்கான திறைசேரியின் இணக்கப்பாட்டை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுப்பேன்.	வருமானம் கடன் என கணக்கீடு செய்வதற்கும் மற்றும் எதிரீடு செய்வதற்காக திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ள வேண்டும்.

திறைசேரிக்கு செலுத்த வேண்டிய 2024 ஆண்டின் திணைக்களத்தின் வருமானக் குறியீடு 2003.02.10 இன் வருமானமாகிய ரூபா 432,232,006 இற்கான (சங்கங்களின் வருமானம் தவிர) தொகையில் 50 சதவீதம் அதாவது ரூபா 216,116,003 தொகை திறைசேரி முற்பணத்திற்கு எதிரீடு செய்திருந்த போதிலும், அதற்காக திறைசேரியின் இணக்கப்பாடு பெற்றுக்கொண்டிருக்கவில்லை.		

3.2 செலவு முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
மதிப்பீடு முடிந்தளவு முழுமையாக மற்றும் சரியாக தயாரித்திருக்காமையால், அரசாங்க ஊழியர்களுக்கான ஆதனக் கடன் வட்டி செலவுத் தலைப்பில் (1506) ரூபா 806,538 தொகை அதாவது 67 சதவீதத்திற்கான ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்ததுடன், அதற்கான காரணங்கள் உத்தியோகத்தர்களின் இடமாற்றம் என காட்டப்பட்டிருந்தது. மேலும், அந்தச் செலவுத் தலைப்பின் மீதியான ஏற்பாடுகள் நிதிப் பிரமாணம் 66 இன் மூலம் மாற்றுவதற்கு முடியுமாக இருந்த போதிலும், ஏனைய படிகள் (1003) செலவுத் தலைப்புக்காக 03 சந்தர்ப்பங்களில் கூட்டுத்தொகை ரூபா 13,640,000 தொகைக்கான குறை நிரப்பு மதிப்பீடு பெற்றுக்கொண்டிருந்தது.	2024 ஆண்டில் ஆதனக் கடன்கள் பெற்றுக்கொள்ளப்படும் என எதிர்பார்த்து மீதி ஏற்பாடுகளை மாற்றப்பட்டிருக்காததுடன், 2024 ஆண்டின் ஜனவரி மாதம் முதல் அதிகரிக்கப்பட்ட வாழ்க்கைச் செலவுப்படி செலுத்துவதற்கு மற்றும் அரசாங்க சேவையின் நிறைவேற்றுச் சேவை வகுப்பைச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கு விஷேட கொடுப்பனவு செலுத்துவதற்கும் 1003 செலவுத தலைப்புக்காக மேலதிக ஏற்பாடுகள் வழங்கப்பட்டது.	செலவு மதிப்பீடுகள் முடிந்தளவு சரியாக மதிப்பீடு செய்யப்பட வேண்டும். தேவைப்பாட்டுச் சந்தர்ப்பங்களில் நி.பி. 66 மாற்றங்கள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3.3 கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்கள்

2018 இன் 19 இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பிரவு 38 இன் ஏற்பாடுகளின் படி கணக்கீட்டு உத்தியோகத்தரினால் பின்வரும் விடயங்கள் தொடர்பாக உறுதிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும், அதன்படி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டுக்கான வெற்றிகரமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுகின்றதென பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டிதுடன், அந்த முறைமையை வெற்றிகரத் தன்மை தொடர்பாக காலத்துக்குக் காலம் மீளாய்வு செய்யப்பட்டு அதன்படி முறைமையை வெற்றிகரமாக மேற்கொள்ளப்படுவதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் அந்த மீளாய்வு எழுத்துமூலம் மேற்கொள்ளப்பட்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறான மீளாய்வாண்வொன்று மேற்கொள்ளப்பட்டதற்கான கூற்றுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.	திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டுக்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரித்து பேணிச் செல்லப்படுகின்றது. அது தொடர்பாக தேவையான மீளாய்வுகள் மேற்கொள்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.	2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரசட்டத்தின் 38 ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும்.

3.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காட்டப்பட்டுள்ளது.

	அவதானிப்புக்கள்			கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
	சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு	பெறுமதி ரூபா	இணங்காமைகள்		
(அ)	கம்பனிக் கட்டளைச் சட்டத்தினால் விதிக்கப்பட்ட 1964 கம்பனிகள் (கணக்குப் பரிசோதனை) கட்டளை				
	(i) கட்டளை 2		கட்டளையின் கீழ் காணப்படும் கருமங்களை நிறைவேற்றுவதற்காக அறிவுரை சபையொன்று நியமனம் செய்யப்பட்டிருக்கவில்லை.	தலைவர் என்ற வகையில் கம்பனிப் பதிவாளர், வாணிப பணிப்பாளர், திறைசேரிச் செயலாளர் அல்லது அவரினால் பெயர் குறிப்பிடப்பட்ட உத்தியோகத்தர் ஒருவர், உள்நாட்டு இறைவரி ஆணையாளர், இலங்கை தொழில்நுட்பக் கல்லூரியின் பணிப்பாளர், சபையின் செயலாளர் என பெயரினால் அல்லது பதவியினால் உத்தியோகத்தர்களை கொண்ட குழுவொன்று நியமனம் செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படும்.	கம்பனிகளின் கட்டளைச் சட்டத்தின் கட்டளையின் பிரகாரம் அறிவுரையாளர் குழுவொன்று நியமனம் செய்யப்பட வேண்டும்.
	(ii) கட்டளை 5(1) பந்தியில் பிரிவுகள் (ஆ), (இ) மற்றும் (ஊ)		தகைமையுடைய விண்ணப்பத்தாரிகள் வாய்மொழிப் பரீட்சையில் சித்தியடைதல் கட்டாயமாக காணப்படாத போதிலும், 2021 முதல் 2024 ஆண்டு வரை நேர்முக பரீட்சை அறிக்கைகளை	பின்னைய காலத்தில் நியமனம் செய்யப்பட்ட அறிவுரையாளர் சபையினால் விண்ணப்பதார் இடையே மிகவும் தகைமையுடைய நபர்களை தெரிவு செய்து நியமனம்	கம்பனிகளின் கட்டளைச் சட்டத்தின் கட்டளையின் பிரகாரம் கணக்காய்வாளர்களை பதிவு செய்வதற்காக நடவடிக்கை

		பரிசோதனை செய்த போது விண்ணப்பதாரிகள் வாய்மொழிப் பரீட்சையின் போது சித்தியடையாமைக்காக பதிவு செய்ய முடியாமல் போன 16 சந்தர்ப்பங்கள் காணப்பட்டது.	செய்வதற்காகவும், கணக்காய்வாளர் என்ற வகையில் நியமனம் செய்வதற்காக தகைமை காணப்படுகின்றதா என உறுதிப்படுத்துவற்காகவும் கணக்காய்வுத் துறை தொடர்பான கேள்விகள் வினவுதல் மேற்கொள்ளப்பட்டது.	எடுக்க வேண்டும்.
(iii) கட்டளை 9(1)	55,200	பட்டயக் கணக்காளரான நபரொருவர் பதிவு செய்தல் கட்டணத்திலிருந்து விடுவிக்கப்பட்டிருந்த போதிலும், அவவாறான 08 விண்ணப்பத்தாரிகளிடம் கூட்டுத்தொகை ரூபா 55,200 தொகை பதிவு செய்தல் கட்டணமாக அறவீடு செய்யப்பட்டிருந்தது.	பட்டயக் கணக்காளரிடம் பதிவு செய்தல் கட்டணம் அறவீடு செய்யப்பட்டிருப்பின் அது தொடர்பாக விசாரணை மேற்கொண்டு சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	கம்பனிகள் கட்டளைச் சட்டத்தின் கட்டளையின் பிரகாரம் கட்டணங்கள் அறவிடப்படக் கூடிய கணக்காய்வாளர்களிடம் மாத்திரம் பதிவு செய்தல் கட்டணம் அறவீடு செய்யப்பட வேண்டும்.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 சொத்துக்கள் முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
திணைக்களத்தின் 05 வாகனங்களுக்காக மூன்று சாரதிகள் மாத்திரம் இணைக்கப்பட்டிருந்தமையால் எச் சந்தர்ப்பத்திலும் 02 வாகனங்கள் நாளாந்த கடமை அலுவல்களுக்காக பயன்படுத்த முடியாமல் காணப்பட்டது.	திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் சாரதிகள் 04 பேர்கள் மாத்திரம் அடங்குவதுடன், நிலவுகின்ற வெற்றிடங்களை நிரப்புவதற்காக உரிய நடவடிக்கைகள் மேற்கொண்டு தரும்படி வேண்டி 2024.05.22 திகதி இணைந்த சேவை பணிப்பாளர் நாயகத்திற்கு பிரதியொன்றுடன் கைத்தொழில் அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.	திணைக்களத்திற்காக போதியளவு சாரதிகள் எண்ணிக்கையொன்று அங்கீகரித்துக்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

4.2 முகாமைத்துவ பலவீனங்கள்

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
1989 – 2000 காலப் பகுதியில் இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள மூன்று உத்தியோகத்தர்களிடம் ரூபா 109,806 இற்கான கடன்மீதிகள் 2024 திசெம்பர் 31 திகதி அளவிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.	ரூபா 32,540 இற்கான நிலுவைக் கடன்மீதி கணக்குப் பொழிப்பின் மூலம் தீர்ப்பதற்கும் ரூபா 77,266 தொகைக்கான நிலுவைக் கடன்மீதி அரச கணக்குத் திணைக்களத்தை வினவி தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	இடமாற்றம் பெற்றுச் செல்லும் உத்தியோகத்தர்களின் கடன் மீதிகளை தாமதம் இன்றி தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

5. நல்லாளுகை

5.1 உள்ளகக் கணக்காய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் 2024 மார்ச் 16 முதல் 2025 மே 28 வரை விடுமுறை பெற்றிருந்ததுடன் 2025 ஜனவரி வரை இந்தப் பதவியில் பதில் கடமையாற்றுவதற்காக உத்தியோகத்தர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டிருக்கவில்லை. 2024 ஆண்டிற்கான உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தின் படி உள்ளகக் கணக்காய்வு அளவினால் 243 மனித நாட்களை பயன்படுத்துவதற்காக திட்டமிடப்பட்ட போதிலும், கணக்காய்வுக் கருமங்களுக்காக உண்மையாகவே 25 மனித நாட்கள் மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன்படி, நிதிப் பிரமாணம் 133 மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பிரிவு 40 இன் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு அலுவல்கள் போதியளவு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் பதவியில் பதில் கடமையாற்றுவதற்காக தகைமையுடைய உத்தியோகத்தர் ஒருவரை இணைத்துத் தரும்படி அப்போதைய வரிசை அமைச்சுக்கு கடிதம் அனுப்பப்பட்ட போதிலும், உத்தியோகத்தர் ஒருவர் இணைக்க முடியாமல் போனது. தற்போது வரிசை அமைச்சிடம் வேண்டப்பட்ட போதிலும், பதில் கடமைக்காக உத்தியோகத்தர் ஒருவர் இணைத்துக்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படும்.	உள்ளகக் கணக்காய்வு தொடர்ச்சியாக செயற்படுவதற்கு பொறுப்பாக இருக்க வேண்டும்.

5.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கை இலக்கம் DMA/01-2019 இன் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரினால் தனக்கு உதவி வழங்குவதற்காக நியமனம் செய்யப்பட்டிருந்த கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் குறைந்த அளவு காலாண்டுக்கு ஒருமுறை ஏனும், அதாவது ஆண்டிற்கு 04 என்ற முறையில் நடாத்தப்பட வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது திணைக்களத்தில் ஒரு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டம் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தது.	பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் மருத்துவ மற்றும் மகப்பேற்று விடுமுறை பெற்றுக்கொண்டிருந்தமையால் அந்தப் பதவியில் கடமையை நிறைவேற்றுவதற்காக தகைமையுடைய உத்தியோகத்தர் ஒருவரை இணைப்பதற்கு திணைக்களத்தில் காணப்படாமையால், கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கூட்டங்கள் உரிய முறையில் நடாத்துவதற்கு முடியாமல் போனது. 2025 ஆண்டின் போது நடாத்தப்பட வேண்டிய கூட்டங்களின் குறைந்த எண்ணிக்கையை உரிய முறையில் நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சுற்றறிக்கையின் பிரகாரம் குறைந்தபட்சம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத் தவணைகள் எண்ணிக்கை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

6 மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 185 ஆன இருந்த போதிலும், உள்ளவாறான பதவியணி 130 காணப்பட்டதால் வெற்றிடங்கள் 55 காணப்பட்டது.	நிரந்தர நியமனங்கள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.	அத்தியவசிய பதவிகளின் வெற்றிடங்களை தாமதமின்றி நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	திணைக்களத் தலைவர் பதவியான கம்பனிப் பதிவாளர் நாயகம் பதவி தொடர்பாக அங்கீகாரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறையொன்று அங்கீகரிக்கப்பட்டிருக்காததுடன், 2024 ஜூலை 07 திகதி முதல் இரண்டு சந்தர்ப்பங்களில் இரண்டு உத்தியோகத்தர்கள் பதில் கடமையாற்றுவதற்காக நியமனம்	நிரந்தர நியமனங்கள் மேற்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது.	கம்பனிப் பதிவாளர் நாயகப் பதவிக்கு ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறையொன்று அங்கீகரிக்கப்பட்டு நிரந்தர உத்தியோகத்தர் ஒருவர் நியமனம் செய்யப்பட வேண்டும்.

	செய்யப்பட்டிருந்த போதிலும், பதவிக்குரிய நிரந்தர நியமனம் ஒன்று 2025 ஏப்ரல் 30 திகதி வரை நியமனம் செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும், உதவி கம்பனிப் பதிவாளர் (நிருவாகம்) பதவி அங்கீகரிக்கப்பட்டிருந்த 2016 ஒக்தோபர் 24 திகதி முதல் 2025 ஏப்ரல் 30 திகதி வரை கடமையை அணவல் செய்யும் மற்றும் பதில் கடமையாற்றுவதற்காக நியமனம் செய்யப்பட்டிருந்த போதிலும், முழு நேர அடிப்படையில் உத்தியோகத்தர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டிருக்கவில்லை.		கம்பனிப் பதிவாளர் (நிருவாகம்) பதவிக்கு நிரந்தர நியமனம் மேற்கொள்ளப்பட வேண்டும்.
(இ)	சட்ட உத்தியோகத்தர் பதவி 2023 திசெம்பர் 28 திகதி முதலும், கணக்காளர் பதவி அங்கீகரிக்கப்பட்டிருந்த 2024 மார்ச் 19 திகதி முதலும் வெற்றிடமாக காணப்படுகின்றது.	சட்ட உத்தியோகத்தர் பதவியில் பதில் கடமையாற்றுவதற்காக மீன்பிடி மற்றும் நீரியல் வள அமைச்சின் சட்ட உத்தியோகத்தர் விருப்பம் தெரிவித்துள்ளதுடன், அது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. அதேபோல் சட்ட உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்புக்காக அரசாங்க சேவையின் ஆட்சேர்ப்பு செய்முறை மீளாய்வாண்டின் போது நியமனம் செய்யப்பட்ட குழுவினால் அங்கீகாரம் பெற்றுக்கொள்வதற்காக விண்ணப்பிக்கப்பட்டுள்ளதுடன், தாமதம் இன்றி ஆட்சேர்ப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என.	சட்ட உத்தியோகத்தர் பதவியை தாமதமின்றி நிரப்புவதற்கும், கணக்காளர் பதவிக்கு நிரந்தர உத்தியோகத்தர் ஒருவரை ஆட்சேர்ப்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஈ)	இரண்டாம் மட்ட பதவியொன்றாகிய கம்பனி பரிசோதகர் பதவிகளுக்காக அங்கீகரிக்கப்பட்ட 10 பதவிகளில் 08 பதவிகள் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு வெற்றிடமாக காணப்பட்டதுடன், பதவியில் நிரந்தரமாக கடமையாற்றும் உத்தியோகத்தர் ஒருவருக்கு 2028 ஜனவரி 31 திகதி வரை 05 வருட காலம் உள்நாட்டு விடுமுறை வழங்கப்பட்டிருந்தமையால் 2023 ஜனவரி 31 திகதி முதல் கம்பனிப் பரிசோதகர் உத்தியோகத்தர்	கம்பனி பரிசோதகர் பதவிகளுக்காக அங்கீகாரம் வேண்டி முகாமைத்துவச் சேவைத் திணைக்களத்திற்கு வேண்டுகோளொன்று மற்றும் அரசாங்க சேவை ஆட்சேர்ப்புச் செய்முறை மீளாய்வு செய்வதற்காக நியமனம் செய்யப்பட்டுள்ள குழுவிடம் வேண்டியுள்ளதுடன், ஆட்சேர்ப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என.	திணைக்களத்திற்கு அத்தியவசியான பதவியொன்றான கம்பனிப் பரிசோதகர் பதவிகள் 80 சதவீதம் வெற்றிடங்கள் காணப்படும் போது உத்தியோகத்தர் ஒருவருக்கு 05 வருட கால உள்நாட்டு விடுமுறை வழங்குவதற்கு பரிந்துரைத்த மற்றும் அங்கீகரித்த உத்தியோகத்தர்கள்

பதவியில் ஒரு உத்தியோகத்தர் மாத்திரம் கடமையாற்றுகிறார்.	பொறுப்புச் சொல்ல வேண்டியிருப்பதனால் அது தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். வெற்றிடங்களை நிர்ப்புவதற்கு தாமதமின்றி நடவடிக்கை எடுக்க வேண்டும்.